விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆடி 26 ஜூலை 12 இதழ் 177
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 10 8 84

## லஞ்ச வலையில்
## பொலிஸ் இன்ஸ்பெக்டர், மின்முகாரி, உதவி அரசாங்க அதிபர்!
### மூவருக்கும் விளக்க மறியல்

(கொழும்பு)

லஞ்சம் பெற்றதாகப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரும், உதவி அரசாங்க அதிபர் ஒருவரும், மின்சார போர்மன் ஒருவரும் வெவ்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் அண்மையில் லஞ்சத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் கேகாலைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தவர். இவர் சந்தேகநபர் ஒருவரைப் பிணையில் விடுவது தொடர்பாக 3 ஆயிரம் ரூபாவை லஞ்சமாகப்பெற்றுள்ளார். கொழும்பு மாஜிஸ்திரேட் முன்னர் இவர் ஆஜர் செய்யப்பட்டபோது இவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

மரங்களை வெட்டுவது தொடர்பாக 500 ரூபா லஞ்சம் பெற்றதாக இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த உதவி அரசாங்க அதிபர் ஒருவர் கைதானார். இவரும் கொழும்பு மாஜிஸ்திரேட் முன்னிலையில் நிறுத்தப்பட்டதையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மகரகமவில் மின்சாரக்கட்டணத்தை குறைவாக விதிக்கும் வகையில் குடியிருப்பாளர்

(6ம் பக்கம் பார்க்க)

# வடபகுதிச் சம்பவங்கள்:
# பிரதமர் இந்திரா கவலை!

## உடனடி நடவடிக்கை எடுக்குமாறு இந்திய பாராளுமன்றத்தில் ஒருமித்த குரல்

(புதுடில்லி)

**இலங்கையின் வடபகுதியில் இடம்பெறும்சம்பவங்களுக்கு இந்தியப் பாராளுமன்றத்தில் பிரதமர் திருமதி இந்திரா காந்தி உட்பட அரசாங்க, எதிர்க்கட்சி தரப்பு உறுப்பினர்கள் அனைவரும் ஒருமித்து கண்டனம் தெரிவித்ததுடன் தமது ஆழ்ந்த கவலையையும் தெரிவித்தனர்.**

இந்திய பாராளுமன்றத்தின் அண்மைக்கால வரலாற்றில் அரச, எதிர்க்கட்சி தரப்பினர் அனைவரும் ஒருமித்த கருத்துடன் முதற்தடவையாகக் குரல் எழுப்பினர்.

இலங்கைத் தமிழரின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பளிக்க கட்சி வேறுபாடின்றி உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

### பிரதமர் இந்திரா உரை

பல உறுப்பினர்களின் கோரிக்கைக்கிணங்க நாடாளுமன்றத்தில் இலங்கைச் சம்பவங்கள் குறித்து சிறிய விவாதம் ஒன்று நடைபெற்றது. இந்த விவாதத்தினூடே பிரதமர் இந்திரா காந்தி உரையாற்றினர்.

இலங்கைத் தமிழ் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பளிக்கவேண்டியதை வலியுறுத்திய பிரதமர் இந்திரா இயன்றதனைத்தையும் செய்ய இந்தியா தயாராக இருப்பதாக தனது உரையில் தெரிவித்தார்.

இலங்கைச் சம்பவங்கள் தொடர்பாக நிதானத்தைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று கூறிய அவர், தமிழ் மக்களைப் பாதிக்கக்கூடியவகையில் இந்தியத் தலைவர்கள் நடந்துகொள்ளக்கூடாது என்றும் கூறினர்.

### இந்தியாவின் உதவியை நாடவில்லை

''தமிழ்த் தீவீரவாதிகளுக்கு இந்தியா புகலிடம் அளிக்க

(5-ம் பக்கம் பார்க்க)

## யாழ். நீதிமன்றம்
## பொலிசார் வராததினால் விசாரணைகள் ஒத்திவைப்பு!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்திற்கு பொலிஸார் எவரும் நேற்றுவராததினால் விசாரணைகள் நடைபெறவில்லை.

சட்டத்தரணிகள், கட்சிக்காரர்களும் மிகக்குறைவாகவே வந்திருந்தனர் இதைத்தொடர்ந்து விசாரணைகள் யாவும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணைகள் யாவும் அடுத்தமாதம் 20ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினமும் சட்டத்தரணிகள், ஊழியர்கள், கட்சிக்காரர்கள் வராததினால் விசாரணைகள் நடைபெறவில்லை போக்குவரத்து வசதியில்லாததினால் ஊழியர்கள் வரமுடியாத நிலைமை ஏற்பட்டது.

[சு]

## வலி வடக்கில் நேற்றையநிலைமை

(மாவிட்டபுரம்)

வலி வடக்குப் பகுதியில் நேற்று ஆயுதப்படையினர் அடிக்கடி ரோந்து சுற்றி வந்தனர். நகரில் பெரும்பாலான கடைகள் ஒற்றைக்கதவை திறந்து வியாபாரம் நடைபெற்றது. அவையும் சிலமணி நேரத்தின்பின் மூடப்பட்டன, போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்தமையால் பொதுமக்களும், தொழில்களுக்குச் செல்பவர்களும் பெரும் கஷ்டங்களுக்குள்ளாகினர்கள்.

## இரத்தம் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி இரத்தவங்கியில் இரத்தத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பல பிரிவுகளையும் சேர்ந்த இரத்தம் உடனடியாகத் தேவைப்படுவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

## பஸ் சேவை இல்லை

(யாழ்ப்பாணம்)

நேற்று நண்பகல் ஒரு மணியுடன் வ. போ. ச. பஸ் சேவை மேலிட உத்தரவின் பேரில் நிறுத்தப்பட்டுள்ளது.

(மா)

## நல்லூர்த்திருவிழா நேரமாற்றம்

[யாழ்ப்பாணம்]

நல்லூர்க்கந்தசுவாமி ஆலய உற்சவங்களில் நேரமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மஞ்சத்திருவிழா, கார்த்திகைத் திருவிழா, கைலாச வாகனத் திருவிழா, வேல் விமானத் திருவிழா, சப்பறத் திருவிழா, பூங்காவனம் ஆகியவை பிற்பகல் 4-30 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

K. S. B. TOURS

யாழ்ப்பாணம் — கொழும்பு
கொழும்பு — யாழ்ப்பாணம்

தினசரி பஸ் சேவைகள்

- ★ பண்பான உபசரிப்பு.
- ★ சிரமமற்ற இருக்கை வசதிகள்.
- ★ வெளிநாடு செல்பவர்கள் பணத்தைச் சிரமமின்றி எடுத்துச் செல்லும் வசதிகள்.
- ★ இரு வழிப் பயண டிக்கட் வழங்கும் வசதி.
- ★ சொகுசான உறங்கல் ஆசனம்.

முக்கிய குறிப்பு:

11-8-84 சனிக்கிழமை முதல் தினசரி காலை 7 மணிக்கும் மாலை 4-30 மணிக்கும் பஸ் சேவை நடைபெறவுள்ளது.

டிக்கட் பதிவு செய்யுமிடம்:-

இல: 37, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கம்: 22159.

(1309)

## யாழ்ப்பாணம்
# 4வது நாளாக நேற்றும் வெறிச்சோடிக் காணப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரம் நேற்று நான்காவது தினமாக வெறிச்சோடிக் காணப்பட்டது.

நேற்றுக்காலை சில கடைகள் ஒற்றைக் கதவில் திறக்கப்பட்டபோதிலும், சில மணி நேரத்தில் சகல கடைகளும் பூட்டப்பட்டு மரண அமைதி நிலவியது.

ஆஸ்பத்திரி ஊழியரின் சடலம் ஒன்றும் மருதனமடத்திலிருந்து கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்தும் கன்னதிட்டியில் காலையில் ஏற்பட்ட சம்பவம் ஒன்றை தொடர்ந்தும் பதட்டம் ஏற்பட்டது. பஸ் நிலையத்தில் நின்றவர்கள் நாலா பக்கமும் சிதறிஓடினர்கள். கடைகள் யாவும் பூட்டப்பட்டன. சேவையில் ஈடுபட்டிருந்த சில மினிபஸ்களும் பஸ் நிலையத்தை விட்டுபுறப்பட்டன.

வ. பி. போ. ச. பஸ்கள் சேவையில் ஈடுபட்டபோதிலும் பிரயாணிகள் மிகக்குறைவாகவே இருந்தனர். டாக்ஸிகள் சேவை நடைபெறவில்லை

காலை 10 மணிக்கு பின்னர் வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. சந்தைகள் கூடவில்லை. கன்னதிட்டியில்' சம்பவம் ஒன்றுநடைபெற்றதை தொடர்ந்து மக்கள் அச்சத்தினால் சிதறிஓடினர்கள் தியேட்டர்களில் சினிமாகாட்சிகள் நடைபெறவில்லை,

ஆஸ்பத்திரி ஊழியர்கள் நேற்றுக்காலை கூடிஆலோசனை நடத்தினர்கள், ஆஸ்பத்திரி ஊழியர் ஒருவர் நேற்றுக்காலை பலியானதைத் தொடர்ந்து ஆஸ்பத்திரியில் பதட்டம் நிலவியது நோயாளிகள் மிகவும் குறைவாக வந்திருந்தனர். வெளிநோயாளர் பிரிவு வெறிச்சோடிக்கிடந்தது.

யாழ். அரசாங்க செயலகத்தில் நேற்று 50 சதவீதமான ஊழியர்களே வந்திருந்தனர். நேற்றுக்காலை தூர இடத்திலிருந்துவந்தவர்கள் வீடுகளுக்கு சென்றுவிட்டனர். செயலகத்திற்கு அருகில்வசிக்கும் ஊழியர்கள்மட்டும் நண்பகல்வரை

(5-ம் பக்கம் பார்க்க)

# விளம்பரம்

## விற்பனைக்கு

BAIRAHA FARMS HISEX வெள்ளை, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 13ந், 20ந் திகதிகளில் விநியோகிக்கப்படும். சற்குணராசா பிறதர்ஸ் பிரம்படி, கொக்குவில். 1244

கமறுக்கள் - றேடியோக்கள் - சகலவித தளபாடங்கள் - கார் சீற் கவர்கள் - அலுமாரிகள் - சைக்கிள்கள் - ICMA புத்தகங்கள் - கடிகாரவகைகள் - இன்னும் அநேக பொருட்கள். விபரங்களுக்கு முத்திரைக் கவருடன் விண்ணப்பிக்கவும்: கார்த்திகேசு, ஏல விற்பனை நிலையம், கோப்பாய். (1189)

## தேவை

அப்பள வேலையில் நன்கு அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை. நாளுக்கு 20/- முதல் 25/- வரை சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும். S. செல்வராணி, புலவனூர் வீதி, கல்வியங்காடு. 1306


## தவறிவிட்டது

07-08-84 அன்று கொக்குவில் - மானிப்பாய்க்கிடையில் அமைந்துள்ள தாவடி வீதியில் எனது மோட்டார் சைக்கிள் பற்றிப் பக்கத்துமூடி தவறிவிட்டது. அம்மூடியில் "125" "H. R." ஆகிய எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஒப்படைப்பவர்கட்கு உரிய சன்மானம் வழங்கப்படும், என். சிவநாதன் 428, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம். தொலைபேசி: 23853. 1307

3-8-84 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் மானிப்பாயிலிருந்து மாதகல் சென்ற தனியார் பஸ் ஒன்றில் எமது குறிப்புக்களும் உடைமைகளும் கொண்ட சிவப்புக் கூடை தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காட்ட விலாசதாரருடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டப்படுகின்றார்கள். மா. சிவநாதன் 24, இராமநாதன் வீதி யாழ்ப்பாணம். 1301

## பிறந்தநாள் வாழ்த்து

### செல்வி ப. துவாரகா



சங்குவேலி தெற்கைச் சேர்ந்த பரராசசிங்கம் (மகாலிங்கம்) கலா தம்பதிகளின் செல்வப் புதல்வி துவாரகா முதலாவது பிறந்ததினத்தை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, மம்மா, மாமாமார், அத்தைமார், பெரியப்பா, அன்ரிமார், அண்ணா, அக்கா, மச்சிமார், மச்சான்மார் ஆகியோர் நயினை அம்மன் அருளால் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.


(1302)

## ஓராண்டு நினைவு

### அமரர் சண்முகம் தியாகராசா

(உரிமையாளர், யாழ்ப்பாண ஸ்ரோர்ஸ், நாரஹென்பிட்டி)

| தாயின் மடியில் | இறைவன்அடியில் |
|---|---|
| 14–7–1945 | 24–7–1983 |



ஆண்டு ஒன்று கடந்தும் ஐயா அணையவில்லை. உன் நினைவு வேண்டுவோம். உனை நினைந்து ஐயா வேகின்றோம். என்நாளும் தார்மீகம் புரிந்தவர்கள் செய்த ஆடிக்கலவரத்து அகால வேளையில் உன்னைப் பிரிந்து நாம் ஊனமாய் போய்விட்டோம். சென்றுவிட்ட இடமறியோம் ஐயா தேடுகின்றோம் எந்நாளும்.

11-8-84ல் அவரின் பிரார்த்தனை கிருத்திகள் நடைபெறும்.

உன் பிரிவால் துயருறும்

**மனைவி, மக்கள், தாய், தந்தை, சகோதரி, சகோதரர்கள், மாமா, மாமி, மைத்துனர்கள், மைத்துனிமார், உறவினர்கள், நண்பர்கள்.**

5-ம் வட்டாரம்,
புளியடிச்சந்தி, புங்குடுதீவு. (1174)

## இன்று

[சுழிபுரம்]

பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலில் இன்று வரலட்சுமி விரத விஷேட பூசையும் ஏழாம் திருவிழாவும் நிகழும்.

வரலட்சுமி விரதத்தையொட்டி நண்பகல் சங்காபிஷேகம் ஆரம்பமாகி விஷேட பூசை நடைபெற்றபின் இலக்குமி நோன்பு நூல் வழங்கும் நிகழ்ச்சியும் விசேடமாகஇடம் பெறும். 7ம் திருவிழாவையொட்டி மாலைத்திருவிழாவின் போது மூன்று குதிரை வாகனங்களில் வரதராஜப் பெருமாளும் மகாலட்சுமியும் பூமிலக்குமியும் வீதிவலம்வருவார்கள். (ப)

## நால்வர் காயம்

(யாழ்ப்பாணம்)

காயங்களுடன் நான்கு பேர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களுள் 8 வயதுச்சிறுவனும் ஒருவனாவான். நேற்று பகல் யாழ் நகரில் இச்சம்பவம் இடம்பெற்றது.

அற்புதராசா [15 வயது] [விலாசம் தெரிவிக்கப்படவில்லை] இவர் ஆபத்தானநிலையில் உள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரம் நேற்றுப்பகல் தெரிவித்தது.

சொர்ணலிங்கம் 54 வயது [ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம்), மகாலிங்கம் கந்தையா 65 வயது (திருமகள் வீதி, யாழ்ப்பாணம்), பாப்பயன் விஜயன் 8வயது (முறிகண்டி, கிளிநொச்சி) ஆகியோரே காயமடைந்தவராவார்.

நேற்று நண்பகல் யாழ். நகரில் இருகுண்டு வெடித்தன. இதனைத்தொடர்ந்து சத்தங்கள் கேட்டன. (மா)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

தெல்லிப்பழை, தென்மேற்கு, பெரியாவுடை என்னும் இடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற மார்க்கண்டு நாகமுத்துவின் மரணசாதன மற்ற சொத்துக்கள் பற்றிய விடயம்.

— காலம்சென்றவர்

நாகமுத்து கைம்பெண் சின்னம்மா, பெரியாவுடை, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை. — மனுதார்

இல. தத்துவம் 209

மேற்குறித்த இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடரப்பட்டு அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 10ம் திகதி அன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் ஏதும் இருப்பின் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்

1984-ம் ஆண்டு ஆடி மாதம் 20-ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
பூழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்.

வரைவு
V. S. கணேசலிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.
1258

## 'நெருக்கடியைத் தீர்க்க அரசியல்தீர்வு அவசியம்''

### இந்திய துணை வெளியுறவு அமைச்சர் அறிக்கை

[புதுடில்லி]

இலங்கை த்தமிழ்மக்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை அரசியல் தீர்வுகாண்பதன் மூலமே தீர்க்கமுடியும் என்று இந்தியதுணை வெளியுறவு அமைச்சர் திரு.ராம்நிவாஸ் மிஸ்ரா தெரிவித்துள்ளார்.

இலங்கைச் சம்பவங்கள் தொடர்பாக அரசின் அறிக்கையை வெளியிட்டு உரையாற்றுகையிலேயே அவர்மேற் கண்டவாறு கூறினார்.

பயங்கரவாதத்தை முறியடிக்க வெளிநாட்டவரின் உதவியை நாடியிருப்பதைக் கண்டித்த அவர்,இந்திய அரசின் இந்தக் கண்டனம் இலங்கை அரசுக்கு ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

இஸ்ரேலிய மொசாட் பிரிட்டனின் கூலிப்படை என்பன இலங்கையில் இருப்பது தெரியும் என்ற அவர். தீவிரவாதிகளுக்கு இந்தியா புகலிடம் அளித்துள்ளது என்ற குற்றச்சாட்டை நாம் தொடர்ந்து மறுத்துவருகிற போதிலும் இலங்கையின் பொறுப்புள்ள தலைவர்கள் பொறுப்பற்றவகையில் பேசிவருகின்றனர் என்றார்.

## சிற்றூழியர் வெளிநடப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ் ஆஸ்பத்திரி வெளிநேயாளர் பகுதி தொழிலாளியான பொய்யாமணி பலியானதைத் தொடர்ந்து நேற்றுக்

(6ம் பக்கம் பார்க்க)

## யாழ். விழிப்புலனற்றோர் சங்கம்

### கைதடி.

சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் — 1984 கொண்டாட்டத்தை முன்னிட்டு இச்சங்கம் வினாவிடைப் போட்டியொன்றை நடத்துகின்றது. உடலூனமுற்றோர் குறிப்பாகப் பார்வையற்றோர், அவர்களின் கல்வி, வெள்ளைப்பிரம்பு ஆகியவை தொடர்பாக 25 வினாக்கள் வினவப்படும்.

**முதற் பரிசு 300 ரூபா**
**இரண்டாம் பரிசு 200 ரூபா**
**மூன்றும் பரிசு 100 ரூபா**

### நிபந்தனைகள்:—

1. பங்குகொள்ள விரும்புவோர் விணப்பத்திரத்தைக் கோரி இரண்டு 60 சத முத்திரைகளுடன் கடிதம் ஒன்றினை **செயலாளர், யாழ். விழிப் புலனற்றோர் சங்கம், கைதடி.** என்னும் முகவரிக்கு அனுப்பி விணப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்,
2. பூர்த்தி செய்யப்பட்ட விணப்பத்திரங்கள் யாவும் 20 9 1984 திகதிக்குப் பிந்தாமல் செயலாளரின் முகவரிக்கே திருபி அனுப்பப் பட வேண்டும்.
3. பங்குகொள்பவர் 12—20 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டுல்.
4. பரிசு பெற்றவர்களுக்கு அதுபற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும்.
   **பரிசுகள் யாவும் 13-10-1984 அன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ள சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் - 1984 கொண்டாட்டத்தின்போது வழங்கப்படும்.**
5. யாழ். விழிப்புலனற்றோர் சங்க அங்கத்தவர்களும் அவர்களது குடும்பத்தவர்களும் போட்டியில் பங்குபற்ற தகுதியற்றவர்கள்.
6. நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

(1237)

UNIQUE COMMUNICATION SERVICE

**யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்**



நொடிப்பொழுதில்
தெளிவான சர்வதேச
தொலைபேசி ரெலெக்ஸ்
அழைப்புகளுக்கு
இன்றே நாடுங்கள் - யுனிக்

**24 மணிநேர சேவை**

யாழ் நகர அலுவலகம்
28/18 - 1-1 மகாத்மா காந்தி ரோட்,
(சலுசலவுக்கு அணமையில்)
யாழ்ப்பாணம்.
ரெலெக்ஸ்: - 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891

கொழும்பு நகர அலுவலகம்
அவுஸதிரேலியா கட்டிடம
த.பெ.1917, 54 யோர்க் வீதி, கொழும்பு 1
ரெலெக்ஸ். - 21652, 21742 21918 21931, PERIMP CE
தொலைபேசி:- 22726 547884, 548626, 549065, 549066

### ஆழிக்குமரன் புகழ்

# 'கின்னஸ்' புத்தகத்துக்கு

## அப்பாலும்' செல்லவேண்டியவை

ஆழிக்குமரன் ஆனந்தன் காலமானார் என்ற செய்தி கேட்டுக் கலங்காத தமிழ்நெஞ்சம் இருக்க முடியாது.

பத்தொன்பதாவது வயதில் குமார் ஆனந்தன் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்தபோது கூடவே படகில் சென்றவர்களில் 'ஈழநாடு' பத்திரிகைக்கு அப்போது மாவிட்டபுரம் நிருபராக இருந்த திரு. க. இராசலிங்கமும் ஒருவர்.

குமார் ஆனந்தன் பாக்கு நீரிணையை வெற்றிகரமாக நீந்திக் கடந்து சாதனையை நிலைநாட்டிவிட்டார் என்ற செய்தியை வல்வெட்டித்துறைக்குத் திரும்பியதும் திரு. இராசலிங்கம் தொலைபேசியில் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

''புகைப் படங்கள் எடுக்கப்பட்டதா?'' என்று அவரிடம் கேட்டேன். ''சிலர் எடுத்தார்கள். உடன் கிடைக்குமோ தெரியவில்லை'' என்று பதில் கிடைத்தது.

''கிங்ஸ்லி செல்லையாவும் எங்களுடன் வந்தார். அவர் நிறையப்புகைப்படங்கள் எடுத்தார்'' என்று இராசலிங்கம் கூறியதும் எனக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. கிங்ஸ்லியுடன் தொலைபேசியில் பேசி அவர் எடுத்த பிலிம் சுருள்களைஉடன் இராசலிங்கத்திடம் கொடுத்து அனுப்புமாறும் மறுநாளே திருப்பித் தருவதாகவும்சொன்னேன். அவரும் சம்மதித்தார். இராசலிங்கம் பிலிம் சுருளைக் கொண்டுவந்தார்.

இதற்கிடையில்குமார்ஆனந்தனின் சாதனையைக் கௌரவிக்குமுகமாக 'ஈழநாடு' விசேஷ அனுபந்தம் ஒன்றை வெளியிட்டால் என்ன? என்று ஆலோசித்தோம். அமரர் டாக்டர் சண்முகரத்தினம் அனுமதி தந்தார். சிலவர்த்தகர்களுடன் தொடர்புகொண்டு விளம்பரங்கள் சிலவற்றைச் சேகரித்தோம். கிங்ஸ்லியின் பிலிம் சுருளும் வந்து சேர்ந்தது. சில படங்களைத் தெரிவு செய்து புளக் செய்து இரண்டு பக்க விசேஷ அனுபந்தம் வெளியிட்டோம். ஆழிக்குமரனின்முதல் பெரும் சாதனையைப் புகைப் படங்களுடன் அனுபந்தமாக வெளியிட்டு ஆனந்தனைக் கௌரவித்ததுடன்'ஈழநாடும்' பெருமை பெற்றது.

பாக்குநீரிணையை நாற்பத்திரெண்டு மணித்தியாலம் நாற்பதுநிமிடங்களில் குமார்ஆனந்தன் நீந்திக் கடந்தார். இதன் பின்னரே இவருக்கு 'ஆழிக்குமரன்' என்ற பட்டம் கிடைத்தது.

உலக சாதனை வீரர்களில் தனியான இடத்தைப் பெற்ற ஒரே தமிழ்மகன் ஆழிக்குமரன் ஆனந்தன்.

'கின்னஸ்'புத்தகத்தில் ஈழத்தின் பெயரை ஏழு இடங்களில் இடம்பெறச் செய்தது மட்டுமல்லாமல் ஈழத்தில் மற்றையோர்களும் 'கின்னஸ்' புத்தகம் என்ற ஒன்று இருக்கிறது; அதில் இடம்பெறுவதற்குச் சாதனை முயற்சிகளில் ஈடுபட வேண்டுமென்ற எண்ணத்தையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தியவரும் ஆழிக்குமரனே!

### எஸ். எம். ஜி.

ஆனந்தனின் சாதனைகள் கின்னஸ் புத்தகத்தில் மட்டும் அடங்கிவிடக் கூடியவையல்ல. அதற்கு அப்பாலும் செல்ல வேண்டியவை.

சில வருடங்களுக்கு முன்னர் கொழும்பிலுள்ள தனது வீட்டு ஒழுங்கையில் காரொன்றினால் அடிபட்டு உயிருடன் போராடிக் காலனைவென்றுசாதனைஏற்படுத்தினர்.

இந்த விபத்தினால் ஆனந்தனது வலது கால் இடுப்புப் பகுதியுடன் தகடொன்றினாலேயே இணைக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை அமெரிக்க மிஷன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்து தந்தையாரின் உத்தியோகம் காரணமாக ஏற்பட்ட காரணங்களினால்வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிவரை பத்துப் பாடசாலைகளில் கல்வி பயின்றவர் ஆனந்தன்.

கிரிக்கெட், உதை பந்தாட்டம், உடற்பயிற்சி, பாரம் தூக்கல், நீச்சலடித்தல் போன்றவற்றில் மட்டுமன்றி தமிழ், ஆங்கிலப் பேச்சுப் போட்டிகளிலும் பல பரிசுகளைப் பெற்றவர் ஆழிக்குமரன்.

1961-ம் ஆண்டில் பல்கலைக் கழகத்துக்குச் சென்ற ஆனந்தனுக்கு சட்டம் படிக்கவேண்டுமென்ற ஆர்வம் பிறந்தது. 1969ம்ஆண்டில் சட்டத்தரணியானார்.

நேபாளத்திலும், சென்னையிலும் சிலகாலம் மேடைப் பாடகராகத் தொழில் புரிந்த ஆனந்தன்சென்னையில் திரைப் படத்துறையில் பயிற்சிபெற்று ஒருவருடகாலம்உதவிக் கமராமென்னாகவும் பணிபுரிந்தார்.

இரண்டு திரைக்கதைகளையும் இக்காலத்தில் எழுதிய ஆனந்தன் அவற்றைபடமாக்க முயன்றாலும் முடியாமல்போய் விட்டது. ஆனாலும் என்றாவது ஒரு நாள் அவற்றைத் திரைப் படமாக்கத் திட்டமிட்டிருந்தார்.

## 'சரவணை அருள்மிகு கதிர்வேலாயுத சுவாமி தேர்

சரவணையூரில் பலகோவில்கள்இருந்தும் அதன் உயிர்நாடி போன்று அமைந்திருக்கும் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிகோவில் திருத்தலம், மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியசிறப்புக்களைப் பெற்று, அருட்பொலிவுடைய ஆலயமாக விளங்குகின்றது. அரசமரங்களும், ஆலமரங்களும் சூழ வற்றாத நீர்ச்சுனையுடன் அமைந்து, இயற்கை எழில் கொஞ்சும் இடமாக இத்தலம் அமைந்திருக்கிறது. இத்திருத்தலம், பெயருக்கமைய சரவணப் பொய்கை போன்று காட்சியளிக்கிறது. முருகனின் பெயரால் இக்கிராமத்தின் பெயரும், அதன் அயல்கிராமமாகிய வேலணையும் விளங்குகின்றது.

ஆரம்பத்தில் சிறுகோவிலாக விருந்த இவ்வாலயம், மக்களின் முயற்சியாலும், இளைஞர்களின் ஊக்கத்தாலும் முருகனின் அருட்புதுமையாலும் பெரிய ஆலயமாகக் காட்சியளிக்கிறது.

கதர்காம உற்சவ நாட்களில் இக்கோவில் திருவிழாக்கள், நடைபெறுவதும் ஒருசிறப்பாகும்.

இன்று முருகப்பெருமானுக்குத் தேர்த்திரு விழாவும், நாளை திருவோண நட்ஷத்திர தினத்தில் தீர்த்தோற்சவமும் நடைபெற்று, மறுநாள் திருக் கல்யாணத் திருவிழா நடைபெறும்.

செ. தேவராஜா

# ஞானமிர்தம்

முற்றிச் சரிந்த கதிராகி
முற்றும் விளைந்த மணியாகிக்
கத்தும் கடலின் அலையாகி
காணும் காட்சி அதுவாகித்
தத்தித் தவழுங் குருகாகித்
தாவி அணையும் நதியாகி
முத்தஞ் சொரியு மதலையதாய்
மோனத் தபசி முக மலராய்
நித்த நித்தம் சுகந்தரவே
நினைந்து வருக! எம் வாழ்வே!

- இளம்பரணன்.

★

## "நல்லைநகர் முருகா நம்மையெல்லாம் காப்பாய்"

நல்லை நகர் உறைகின்ற எழில்முருகா
நானிலமே துயரமென தோய்கிறது
தொல்லைகளே எல்லையின்றி வளர்கிறது - கந்தா
துணையிருந்து நம்மையெல்லாம் காருமையா

அமிழ்தான பதிதனில் உறைகின்ற தமிழ்முருகா
அசுரகுலம் அழித்தவனே அற்புதங்கள் தந்தவனே
இனிதான பதி காத்து இல்லமெலாம் துயர்போக்க
இணை சக்தி வேலோடு இங்குயெம்மைகாருமையா,

— காரை பா. அருளானந்தன்.

## ரூபவாஹினி

மாலை
5-30 நாட்டுவளம்
5-35 இசை நிகழ்ச்சி [சிங்களம்)
6-00 விளையாட்டுப் பயிற்சி [தமிழ்]
6-15 ,பிளாஷ் கோர்டன்' [ஆங்கிலம்]
6-55 செய்திகள் [தமிழ்]
7-15 விவரணநிகழ்ச்சி [ஆங்கிலம்]
8-00 சமய நிகழ்ச்சி [சிங்ளகம்]
8-15 செய்திகள் ;சிங்களம்]
8-35 தகவல் நிகழ்ச்சி
9-00 'வொயேஜ்ஒவ் தடாம் திரைப்படம் [ஆங்கிலம்]
9-30 செய்திகள் [ஆங்கிலம்]
9-50 திரைப்படத் தொடர்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-35 திரைப்படத் தொடர்ச்சி
11-00 நிகழ்ச்சிகள் முடிவு

# மற்றுமொரு வங்கிக் கொள்ளை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பிரதானவீதியிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைமீது தீவிரவாதிகள் நேற்றுமுன் தினம் காலை தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் காலை 7 மணிக்கும் 8 மணிக்குமிடையே ஆயுதம் தாங்கிய இளைஞர்களினால் இத்தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது.

ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் வங்கி பாதுகாப்பு ஊழியரைச் சுட்டுவிட்டு வங்கியின் இரும்புப்பெட்டிகளை லொறியொன்றில் எடுத்துச் சென்றுள்ளனர், சுமார் 50 பேர் இக்கொள்ளையை நடத்தியுள்ளனர். அவ்வழியில் வந்த போக்குவரத்து வாகனங்களை மறித்தே இக் கொள்ளையை நடத்தியுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான வங்கிப் பாதுகாப்பு ஊழியர் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்'

### வெள்ளிச் சிந்தனை

## வரலட்சுமி

அருளாளன்

வரலட்சுமி விரதம் மகாலக்குமியின் அருளைப்பெற உரிய நாளாகும். இந்நாளில் பெண்கள் விசேடமாகவும் பொதுவாக அனைவரும் இவ்விரதத்தைச் சிரத்தையுடன் அனுஷ்டித்தல்வேண்டும்.

தைப்பொங்கல் நாளில் ஒவ்வொரு வீட்டிலும் சூரியனைக் குறித்துப் பொங்குவது போன்று வரலட்சுமி விரதத்தன்றும் ஒவ்வொரு வீட்டிலும் இலக்குமி வழிபாடு செய்வது அவசியம். திவசம், வீடு குடிபுகுதல், திருமணம் முதலிய காரியங்களுக்கு ஒவ்வொருவரும் தமது புரோகிதரை வீட்டுக்கு அழைத்து மந்திரபூர்வமாக ஒவ்வொரு கருமத்தையும் நடாத்துதல் போன்றே இந்தியாவில் வரலட்சுமி விரதத்தன்றும் வீட்டில் புரோகிதரை அழைத்து இலக்குமிபூசை செய்வதும் இலக்குமி வழிபாடு நிறைவெய்தியதும் சுமங்கலிகள் கணவனை வணங்கி ஆசிபெறுவதும் கட்டாய நிகழ்ச்சியாக நடைபெறுமாம்.

இங்குள்ளவர்கள் இலக்குமி வழிபாட்டை வீட்டில் செய்யாது கோவில்களிலே செய்தாலும், வீட்டையும் இலட்சுமிகரமானதாகப் புனிதப்படுத்தி இலக்குமி வழிபாடு செய்வதவசியம்.

'புனிதம்-சுறுசுறுப்பு பெரியோர் விசுவாசம் தானம், இரக்கம், பரோபகாரம் முதலிய இல்லாத இடத்தில் நான் இருக் மாட்டேன்'' என்று இலக்குமி இந்திரனுக்கு ஒருமுறை கூறியருளியதை மறவாது இலக்குமி வழிபாடு செய்வது அவசியம்.

★ ★

தூயதுறவுக்கும் தாயன்புக்கும் உதாரணமாகப் பூசிக்கப் படுபவர் பட்டினத்தார். இவரது குருபூசைத்தினமும் இன்றேயாகும்.

''காதற்ற ஊசியும் வாராது காணும்கடைவழிக்கே'' என்ற வார்த்தையை இறைவன்மூலம் பெற்றதும் தருமவழியில்தான் தேடிய செல்வத்தை ஒரு கணப் பொழுதில் துறந்து துறவியானார் தனது செயலுக்காகஒருகாலும் கழிவிரக்கப்படாத பட்டினத்தார் உலமும் தன் உடலும் கானல் நீர் போன்றதென்று மதித்த போதும் தாய்ப் பாசத்தைத் துறக்க முடியாதவராக விளங்கியிருக்கிறார். ஒவ்வொரு பிள்ளையும் பெற்றோருக்கு தீக்கடன், நீர்க்கடன் செய்வதின் கட்டாயம் உணர்ந்த இவர் முற்றும் துறந்த நிலையிலும் தாய்க்கு கடமை செய்யக் காத்திருந்திருக்கிறார்.

பத்து மாதம் சுமந்து பெற்றது மட்டுமன்றிக் குழந்தைப் பருவத்தில் ஒவ்வொரு குழந்தையையும் வளர்த்தெடுக்க ஒவ்வொரு தாயும் படும் பாட்டைக் கண்டு பட்டினத்தார் தன்னையும் ஆளாக்கத் தன் தாய் செய்த தியாகத்தை உணர்ந்து தாயிடம் பக்தி செய்திருப்பதை இவர் தாயைகுறித்துப்பாடிய பாடல்கள் உணர்த்துகின்றன.

பட்டினத்தார் பாடல்கள் மூலம் அரிய உண்மைகளை இரசித்து மகிழும் ஒவ்வொருவரும் அவர் வாழ்வின் மூலம் துறவையும் தாய் மீது வைக்க வேண்டிய அன்பைப் பற்றியும் அறிய வேண்டும்.

★ ★

பொன்னிலும் மணிகளிலும்-
நாலும்
பூவிலும் சாந்திலும் விளக்
கினிலும்
கன்னியர் நகைப்பினிலும்-
செழும்
காட்டிலும் பொழிலிலும்
கழனியிலும்
முன்னியதுணி வினிலும்-
மன்னர்
முகத்திலும் வாழ்ந்திடும்
திருமகளைப்
பன்னிநற் புகழ்பாடி-அவள்
பதமலர் வாழ்த்தி நற்பதம்
பெறுவோம்.

இலக்குமிதுதி
—பாரதியார்

### அகதிகளுக்கான

# உணவுப் பொருட்கள் மாயமாய் மறைந்தன!

## கிளிநொச்சி உதவி அரச அதிபர் கந்தோரில் சம்பவம்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அகதிகளுக்கு விநியோகிக்கவென வைக்கப்பட்டிருந்த மாமூடைகள், மீன்ரின்கள், பால்மா வகைகள் போன்றவை உதவி அரசாங்க அதிபர் கந்தோரில் இருந்து மாயமாக மறைந்து விட்டன.

இந்த உணவுப் பொருட்கள் காணமல்போனது திருட் நடவடிக்கையா? அல்லது மோசடியா? என்ற சந்தேகம் பொதும க்கள் மத்தியில் எழுந்துள்ளது.

5 மூடைமா, 53 ரின்மீன்கள் 13 ரின் குழந்தைகள் பால்மா ஆகியன காணமல் போய் விட்டதாக கிளிநொச்சி பொலிசிலும், உயர்அதிகாரிகளுக்கும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் பணம்வைக்கும் இரும்புப் பெட்டி முன்பு ஒருமுறை உடைக்கமுயற்சி எடுக்கப்பட்டது. இதன்பின் உதவி அரசாங்க அதிபர் கந்தோரில் இயங்கிய அகதிகளுக்கான பிரிவு தீயிட்டுக் கொளுத்தப் பட்டது. தற்போது அகதிகளுக்கு விநியோகிக்க வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருட்கள் காணமல்போயுள்ளன. (கி)

# மீனம்பாக்கம் விசாரணை அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படும்!

## ஏயர் வைஸ் மார்ஷல் ராஜாவீ

### செய்தித்துறை பொறுப்புடன் இயங்கவேண்டும்!

—பொலிஸ் அதிகாரி நாயர்

சென்னை, ஆக.8

மீனம்பாக்கம் குண்டு வெடிப்புச் சம்பவம் பற்றிய விசாரணை அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு அடுத்த மாதம் 15ம் திகதி வரை கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆயினும் இன்னும் 20 அல்லது 25 தினங்களில் அவ் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு விடும் என்று இக்குண்டு வெடிப்புச் சம்பவம்பற்றிய விசாரணைகளுக்குப் பொறுப்பாகவுள்ள ஏயர் வைஸ் மார்ஷல் ராஜாவீ தெரிவித்தார்.

இக்குண்டு வெடிப்புச் சம்பவம், விமானநிலைய அதிகாரிகளும் சம்பந்தப்பட்டதொன்ரு? அநாமதேயத் தொலைபேசி எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டபோதிலும் உரிய நடவடிக்கைகள் ஏன் எடுக்கப்படவில்லை? போன்ற விடயங்கள் விசாரணைகளில் விரிவாக ஆராயப்படுகின்றன என்று தெரிவித்த ஏயர் வைஸ் மார்ஷல் ராஜாவீ, இந்தியாவின் விமான நிலைய மொன்றில் இதுவே முதல் தடவையாக நிகழ்ந்த பெரும் குண்டுவெடிப் பென்றுப் தெரிவித்தார்.

தமிழக தலைமைச் செயலர் திரு சொக்கலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில், மீனம்பாக்கம் குண்டு வெடிப்புக் குறித்துப் பல தடயங்கள் கிடைத்துள்ளன என்றும், இவை குறித்து ஆராய தமிழ்நாடு பொலிஸ் புலன் விசாரணை அதிகாரிகள் நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்றுள்ளனரென்றும் குறிப்பிட்டார்.

பொலிஸ் பகுதியைச் சேர்ந்த உயர் அதிகாரியான கே. கே. ராஜசேகரன் நாயர் என்பவரின் அறிக்கையில், மீனம்பாக்கம் குண்டு வெடிப்புச்சம்பவம் குறித்து சில பத்திரிகைகள் பொறுப்பற்ற வகையில் தகவல்களை வெளியிட்டு வருகின்றனவென்றும், அதிகாரபூர்வமான தகவல்கள் புலன் விசாரணைப் பகுதியினரால் தரப்பட்ட பின்னரே அவற்றைப் பத்திரிகைகள் வெளியிடவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். (கி)

## கிளிநொச்சி தொண்டமாறு பஸ்சேவை

(கரவெட்டி)

கிளிநொச்சி — தொண்டமானு பஸ்சேவையை மீண்டும் ஆரம்பிக்கும்படி வட பிராந்திய போக்குவரத்துச் சபையை இப்பகுதி சமூக நிறுவனங்களும், பிரமுகர்களும் மகஜர் மூலம் கேட்டுள்ளனர்.

## இளைஞரின் சடலம்

(மாவிட்டபுரம்)

பருத்தித்துறை கடைத் தெருவில் பட்டப்பகலில் சூட்டுக் கொல்லப்பட்டுகிடந்த இளைஞர் ஒருவரின் சடலம் கிடக்கக்காணப்பட்டது.

அடையாளம் காணப்படாத இச் சடலத்தின் அருகில் சமூக விரோதி எனக்குறிப்பிடப்பட்ட காகிதம் கிடந்தது.

கழுத்திலும் தலையிலும் சூட்டுக்காயங்களுடன் காணப்பட்ட இவ்விளைஞரை இனந் தெரியாதசிலர் சைக்கிளில் ஏற்றிவந்ததாகக் கூறப்படுகிறது.

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விஸ்தரிப்புக்கு 10 ஏக்கர் காணி!

(மானிப்பாய்)

சேர். பொன். இராமநாதனுக்குச் சொந்தமான, நிலத்தில் பத்து ஏக்கரை ஆசிரிய கலாசாலைக்கு கொடுப்பதற்கு அமைக்கப்பட்ட குழு தீர்மானித்தது. இதுவிடயம் கல்வி அமைச்சுக்கு கலாசாலை அதிபர் பல தடவைகள் தெரியப்படுத்தியும், நிலம் கொடுப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்படவில்லை.

இந்த நடவடிக்கை சம்பந்தமாக, கல்வி அமைச்சருடன் இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் தலைவர் திரு. எம் எஸ். செல்லச்சாமியிடம் பொதுக்காரியதரிசி திரு. க. சிவஞானம், இணைப்பு உத்தியோகத்தர் திரு. மைக்கல் ஜோசப் என்போர் கல்வி மந்திரி ரணில் விக்ரமசிங்கவுடன் நடத்திய பேச்சுவார்த்தையின்படி அக்காணியை ஆசிரிய கலாசாலையின் விஸ்தரிப்புக்கு உபயோகப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதைப்பற்றிய நடவடிக்கை சம்பந்தமாக, கல்விஅமைச்சின் ஆசிரியக் கிளை யாழ்ப்பாண கல்விக் கந்தோருக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

இச்செயற்பாட்டை மீண்டும் துரிதப்படுத்த இலங்கை ஆசிரிய காங்கிரஸ் செயலாளர் திரு. க. சிவஞானம் கல்வி அமைச்சின் காரியதரிசி திரு. ஈ. எல். விஜயமானவுடன் தொடர்பு கொண்டுள்ளார்.

PHOTO STAT

ஹோம் பிஞன்ஸ் கொம்பனியின்

மற்றுமொரு சேவை

தெளிவான பிரதிகளுக்கும்

பெரிதுபடுத்தல், சிறிதுபடுத்தலுக்கும் (ENLARGEMENT, REDUCTION)

ஹோம் கொப்பியேஸ் (HOME COPIERS)

போட்டோ ஸ்டாட்டை

நாடுங்கள்.

கன்னதிட்டி சந்தி, கஸ்தூரியார் வீதி

ஹோம் பிஞன்ஸ் கொம்பனி

82, கன்னதிட்டி வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24310

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர சு. வித்தியானந்தனுக்கு இம் மாதம் 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வடமராட்சி கல்வி வட்டத்தினுல் நடாத்தப் படவிருந்த மணிவிழா தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக மறு அறிவித்தல் வரைபின்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## இடமாற்றம்

(வண்ணார்பண்ணை)

தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ் சடாற்சரசண் முகதாஸ் இம் மாத முதல் மட்டக்களப்புக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

மட்டக்களப்பு அரசாங்கச் செயலக தலைமைக் காரியாலய உதவி அரசாங்க அதிபராக இவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## ★ ஒலிம்பிக்

### பதக்கப் பட்டியல்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 50 | 39 | 16 |
| ருமேனியா | 16 | 19 | 7 |
| சீனு | 13 | 6 | 5 |
| இத்தாலி | 9 | 3 | 6 |
| மே. ஜேர்மனி | 8 | 12 | 13 |
| கனடா | 7 | 8 | 7 |
| ஜப்பான் | 7 | 4 | 8 |
| பின்லாந்து | 4 | 3 | 4 |
| ஆஸ்திரேலியா | 3 | 8 | 10 |
| பிரிட்டன் | 3 | 4 | 15 |
| பிரான்ஸ் | 2 | 2 | 6 |
| நெதர்லாந்து | 2 | 2 | 4 |
| தென் கொரியா | 2 | 2 | 1 |
| நியூஸிலாந்து | 2 | 0 | 1 |
| மெக்ஸிக்கோ | 1 | 2 | 1 |
| பெல்ஜியம் | 1 | 1 | 2 |
| யூகோஸ்லாவியா | 1 | 1 | 3 |
| சுவிற்ச்சலாந்து | 1 | 2 | 2 |
| பிரேஸில் | 0 | 1 | 0 |
| டென்மார்க் | 0 | 1 | 2 |
| சுவீடன் | 0 | 5 | 4 |
| கிரேக்கம் | 0 | 1 | 1 |
| ஆஸ்திரியா | 0 | 1 | 1 |
| கொலம்பியா | 0 | 1 | 0 |
| பேரு | 0 | 1 | 0 |
| நோர்வே | 0 | 1 | 2 |
| தாய்வான் | 0 | 0 | 1 |
| வெனசுவெலா | 0 | 0 | 1 |

### பி. ரி. உஷா 4-வது இடம்



பெண்களுக்கான 400 மீட்டர்கள் தடைதாண்டி இறுதி ஓட்டப் பந்தயத்தில் இந்திய வீராங்கனை பி, ரி உஷா 4-வது இடத்தையே பெற்ருர்,

இவர் 55·42 செக்கன்களில் தமது ஓட்டத்தை நிறைவு செய்தார். இந்நேரம் மயிரிழையில் மூன்ரும் இடத்தைப் பெறத்தவறியதென்று தெரிவிக்கப்பட்டது. முதலாமிடத்தை மொரோக்கோ பெண்ணெருவரும், இரண்டாமிடத்தையும், மூன்ரு மிடத்தையும் அமெரிக்கப் பெண்களும் பெற்றனர் பி. ரி உஷாவின் இவ் ஓட்ட நேரம் ஒரு காமன் வெல்த் சாதனை என்று கூறப்பட்டது.

### சார்ல் லிவிசுக்கு 3 தங்கம்

23 வயதான அமெரிக்க ஓட்ட வீரரான கார்ல் லிவிஸ் இதுவரை மூன்று தங்கப் பதக்கங்களைப் பெற்ருர். நீளம்பாய்தல், 200 மீட்டர் ஓட்டம், 100 மீட்டர் ஓட்டம் ஆகியவையே இவர் தங்கப் பதக்கம் பெற்ற போட்டிகளாகும்.

இவரின் அடுத்த பந்தயம் 400 மீட்டர்கள் ஓட்டமாகும். இதிலும் இவர் தங்கம் பெறவே உத்தேசித்துள்ளார். நான்கு தங்கப் பதக்கங்களைப் பெறுவதே இவரின் முக்கிய நோக்கமாகும். இவ்வாறு இவர் பெற்ருராயின் அமெரிக்க ஒலிம்பிக் வீரரான ஜெஸி ஓவன்ஸின் பின்னர் ஒலிம்பிக்கில் 4 தங்கப்பதக்கங்களைப் பெற்ற வீரராக இவர் மதிக்கப்படுவார்.

### பெண் மரதன் ஓட்ட வீராங்கனை

அமெரிக்காவைச் சேர்ந்த ஜொன்பிநொய்ட் என்பவர் பெண்களுக்கான மரதன் ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தைப் பெற்ருர். இத்தடவையே பெண்களுக்கான ஒலிம்பிக் மரதன் ஓட்டம் முதல் தடவையாக அறிமுகஞ் செய்து வைக்கப் பட்டது. (கி)

## செய்திகள் ★

### லஞ்ச வலையில்..,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவரிடமிருந்து ஆயிரம் ரூபாவை லஞ்சமாகப் பெற்றதாக மின்முகாரி ஒருவர் கைதாஞர்.

கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் திரு. கொலின் அமரசிங்கா முன்னிலையில் இவர் ஆஜர் செய்யப்பட்டதையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (கி)

# ரோமில் ஈரானிய விமானம் பயணிகள் விடுதலை!

## இரு கடத்தல்காரர்கள் சரண்!

ரோம், ஆக. 9

305 பயணிகளுடன் ஈரானிய விமானத்தைக் கடத்திய கடத்தல்காரர்கள் நேற்று ரோமில் சரணடைந்தார்கள்.

பயணிகள் அனைவரையும் எதுவித பாதிப்புமின்றி அவர்கள் விடுவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடத்தல்காரர்களில் இருவர் மட்டுமே சரணடைந்துள்ளனர். இவர்கள் ஈரானிய அரசுக்கெதிரான முஜாஹிதீன் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்விருவரையும் இத்தாலியப் பொலிசார் தமது பாதுகாப்பில் வைத்துள்ளனர். அத்துடன் விடுதலையான பயணிகளையும் பலமாகச் சோதனையிடுகின்றனர். ஏனெனில் கடத்தல்காரர்கள் தம்மில் 18 பேர் இருப்பதாக முன்னர் தெரிவித்திருந்தனர்.

கடத்தல்காரர்கள் தமது கோரிக்கைகள் எதனையும் வெளியிடவில்லை. ஆனல் பாரிஸ் நகரம் செல்ல விருப்பம் தெரிவித்திருந்தனர். (கி)

# கிளிநொச்சி பரந்தன் றேட்டறிகழக நிர்வாகிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பரந்தன் றேட்டறிக் கழகத்தின் புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினுர்கள்:- தலைவர் ப. வை. ஜெயபாலன், உபதலைவர் ம பத்மநாதன், செயலாளர் எஸ். தர்மரத்தினம், பொருளாளர் எஸ். எஸ். செல்லையா தெரிவுத்தலைவர் எஸ். சாந்தலிங்கம், கழகச்சேவை இயக்குநர் வே. இராஜேந்திரன் செய்தொழில் சேவை இயக்குனர் எஸ். சிவகுருநாதன், சர்வதேச சேவை இயக்குனர் மா. வரராஜசிங்கம், சமூகசேவை இயக்குனர்பி. எஸ். மூர்த்தி இளைஞர் சேவை இயக்குனர் ஈ. பி. மரியதாஸ் படைக்கல சேவிதர் எஸ் சிறீரங்கநாதன், பத்திராதிபர் பி. சேகரம்.


ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - சரோஜாதேவி
என் தம்பி

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45, 7-00
BAD BLOOD
Action-Adults Only
திகிலூட்டும்மர்மச்சித்திரம்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவகுமார்- ஜெய்சித்திரா
விஜயகுமார்
பொண்ணுக்கு தங்கமனசு

வின்சர் (யாழ். நகர்)
தினசரி 10-30. 2-30, 6-30
எம். ஜி. ஆர். -சாவித்திரி
வீரப்பா - சந்திரபாபு
மகாதேவி
(புத்தம் புதிய பிரதி)

மனோகரா (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30 6-15,
சிவாஜி - பத்மினி
தவிகா
சரஸ்வதிசபதம்

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, —2-30,
4-30 — 7-00
Eye For An Eye

றீகல் (யாழ். நகர்)
10-30, 2-15, 4-30, 6-30
Terrence Hill ...
Bud Spencer ... in
"WHO FINDS A FRIEND FINDS A TREASURE"
[Latest Action - Comedy]

லிடோ யாழ். நகர்
Daily
10-30, 2-30, 4-45, 7- 15
THE BURNING
(Strictly for Adults)

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர். -லதா நடித்த
நவரத்தினம்
(ஈஸ்மன் கலர்)


# இன்றைய பலன்

மாதம்; ஆடி
திகதி: 26 (10- 08- 1984)
வாரம்: வெள்ளி
திதி: சதுர்த்தி - முன்இரவு 8-14 வரை
நட்சத்திரம்- உத்தராடம் பிற்பகல் 4-07வரை

மேடம்: சுறுசுறுப்புக்குன்றும், உமது சொந்தவாழ்க்கையில் மற்றவர்கள் குறுக்கிடுவார்கள், குடும்பத்தில் சிறு பூசல் தோன்றிமறையும், கொள்கையில் கோணலுடன் கோபமும் அதிகரிக்கும் அமைதி நன்று.

இடபம்; மனம் நிறைந்த வாழ்வு மக்களால் மகிழ்ச்சி இவற்றுடன் கண்ணியமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும், உறவினர்கள் உதவிக்கு ஓடிவருவார்கள் செல்வாக்கு பெருகும்.

மிதுனம்: சிந்தனை அலைகள் மோதும், செய்தொழிலில் பதட்டநிலை தென்படும், அவசர முடிவின்மூலம் குறைகேட்க நேரிடும், பல வழிகளிலும் பணம் விரயமாகும், உடல் நலத்தைப் பேணிக்கொள்ளவும்.

கடகம்: கனிவான நினைவலைகளில் இன்று ஆனந்தமாக மிதந்து செல்வீர்கள், கல்வித் துறையில் வித்துவத்தன்மை தென்படும், வாகனம் செலுத்துபவர்கள் மக்களின் ஆதரவைப் பெறுவர்.

சிங்கம்: இதயத்தில் இனிமை துள்ளும், பகைவர் பணிவர், வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு, பரந்த நோக்குடன் செயற்படுவதன் மூலம் பொதுமக்களின் பாராட்டுக் கிடைக்கும்.

கன்னி: திகைக்க வைக்கும் சம்பவம் இன்று நடைபெறலாம், அரசின் ஆத்திரப் பார்வையும் உங்கள் பக்கம் திருப்ப முடியும், கோஷ்டிச் சண்டையில் மாட்டிக் கொள்ளாதிருக்கவும்.

துலாம்: எண்ணம் போல் வாழ்வு இன்றுமலரும், மற்றவர்கள் மெச்சும் வண்ணம் கடமையாற்றுவீர்கள், இதயத்துக்கு இதமளிக்கக்கூடிய பரிசும் கிடைக்கலாம், ஆதரவும் பெருகும்.

விருச்சிகம்: ..க்கருத்தையும் எண்ணித்துணிக, அவசரப் போக்கினுல் அருமையான சந்தர்ப்பத்தை [illegible] கோட்டைவிடக்கூடும், வணிகர்களாயின் அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும்.

தனுசு: இன்று முன்னணியில் நிற்பீர்கள், பரம்பொருளின் அருளுக்கு இடமுண்டு, பரோபகாரச் சிந்தை தலைதூக்கும் பொதுப்பணிகளில் ஈடுபவீர்கள்.

மகரம்: திட்டமிட்டபடியே வாழ்க்கை நடக்கும், புதிய உறவுமுறைகளுக்கும் இடமுண்டு, உத்தியோக ரீதியாக வெளிநாடு செல்லும் வாய்ப்பும் சிலருக்குக் கிடைக்கலாம்.

கும்பம்: சந்தர்ப்பத்திற்கேற்ற வண்ணம் பொருள் தாராளமாகக் கிடைக்கலாம், சிலர் வாழ்க்கையில் அதிர்ஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு.

மீனம்: சிந்தனையில் தடுமாற்றம் தென்படும், நண்பர் ஒருவரை பகைத்துக் கொள்ள நேரிடலாம், தொழில் துறையில் மறைமுக எதிர்ப்புகளுக்கும் இடமுண்டு, முன்யோசனையுடன் நடக்கவும்.

திருமலை

வே. ரவீந்திரன்

## 4-வது நாளாக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கியிருந்தனர். மற்றும் அரசாங்க காரியாலயங்களிலும், ஊழியர்கள் நண்பகலுடன் சென்று விட்டனர்.

யாழ் மாநகர ப. நோக்கு கூட்டுறவு சங்கக் கிளைகளும் நேற்று திறக்கப்படவில்லை. இதனுல், மக்கள் பாவனைப் பொருட்கள் வாங்குவதற்கு கஷ்டப்பட்டனர்.

ஒற்றைக் கதவில் திறக்கப்பட்டிருந்த சில கடைகளில், ஒருவருக்கு ஒரு கிலோ மாவும், அரை கிலோ சீனியும் மட்டும் வழங்கப்பட்டது. சில இடங்களில், அத்தியாவசிய உணவுப் பொருட்கள் கூடிய விலைக்கு விற்கப்பட்டன.

சந்தைகள் நேற்று வழக்கம் போல் கூடாததினுல் மரக்கறி கிழங்கு வகைகளுக்கு பெரும் தட்டுபாடு ஏற்பட்டுள்ளதுடன் மரக்கறி விலைகளும் அதிகரித்துள்ளது.

யாழ் நகரில் ஒரு சில வங்கிகள் திறந்திருந்த போதிலும், பொது மக்கள் செல்லாததினுல் அலுவல்கள் எதுவும் நடைபெறவில்லை.

வங்கிகள் ஒழுங்காக செயல்படாததைத் தொடர்ந்து ஆசிரியர்கள், அரசாங்க ஊழியரின் சம்பளத்தையும், இளைப்பாற்று சம்பளத்தையும் இம்மாதம் உரிய காலத்தில் பெற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. (க)

பிரான்பற்று

# உப தபாலகத்தை திறக்ககோரிக்கை

(பண்டத்தரிப்பு)

மூடப்பட்ட நிலையிலுள்ள பிரான்பற்று உப தபால் நிலையத்தை இப்பகுதி மக்களின் நலன் கருதி மீண்டும் திறப்பதற்கு ஆவன செய்யப்பட வேண்டும் என்று வட பகுதி தபால் சேவை அத்தியட்சகரை கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்று பிரான்பற்று கிராம அபிவிருத்திச்சங்க புனரமைப்பு பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சங்கானை வடக்கு கிராம சேவை அலுவலர் திரு. ஏ. வேதநாயகம்தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பிரான்பற்று பகுதியிலுள்ள இளைஞர்களினதும், யுவதிகளினதும் நலன் கருதி தொழிற் பயிற்சி வகுப்புகளை சங்க கட்டிடத்தில் ஆரம்பித்து நடாத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ் தொழில் திணைக்கள உதவி ஆணையாளரை கேட்டுக் கொள்ளும் மற்றொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சங்க நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டவர்கள் விபரம் பின் வருமாறு:

தலைவர்: வ. செல்லத்துரை உப தலைவர்கள்; கா. தங்கத்துரை, சு. நடராசா செயலாளர்: க. பரமலிங்கம, உப செயலாளர்: ந. விஜயேந்திரன் பொருளாளர்: சி. மகேந்திரன்

செயற்குழு உறுப்பினர்களாக ஏழு பேர் தெரிவு செய்யப்பட்டனர்.


ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
முத்துராமன்-காஞ்சனு
காதலிக்க நேரமில்லை
(ஈஸ்மன் கலர்- புதிய பிரதி)


# தந்தைக்குப் பயந்து 12 வயதுச் சிறுமிதற்கொலை

(கிளிநொச்சி)

வீடு செல்லாது பலமணி நேரம் விளையாட்டில் ஈடுபட்டிருந்த 12 வயதுதுச் சிறுமிக்கு தந்தையிடம் சொல்லித்தண்டனை வேண்டித்தரப்போவதாக அண்ணன் எச்சரிக்கவே பயமும் பீதியும் ஒருங்குசேர நஞ்சிடம் தஞ்சமடைந்து சிறுமி மரணத்தை தழுவிக் கொண்டார்.

பரிதாபமரணத்தை தழுவியவர் கிளிநொச்சி திருநகர்பிரதானவீதியில் வசித்து வந்த தியாகராசா வானதி என்பவராவார். இம்மரணம் தொடர்பான விசாரணையை கிளிநொச்சிப்பகுதி மரணவிசாரணை அதிகாரி முருகேசு யோகலிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை கிளிநொச்சிப் பொலிசைச் சேர்ந்தசார்ஜன்ட்எம். கணேசதுரை கான்ஸ்டபிள் கருணைநந்தன் ஆஜர்செய்தனர். சடல பரிசோதனையை கிளிநொச்சி மாவட்ட சட்டவைத்திய அதிகாரி பி. நவரெத்தினராசா மேற்கொண்டார்.

மரணமானுேரின் பெற்ருேரான த. தியாகராசா திருமதி தி. பத்மாவதி ஆகியோரும் சாட்சியமளித்ததை தொடர்ந்து தற்கொலை எனமரண விசாரணை அதிகாரி திரு. யோகலிங்கம் தீர்ப்பு வழங்கினுர்.

# வடபகுதிச்....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வில்லை என்று தொடர்ந்து கூறிவருகின்றபோதிலும் இலங்கைப் பிரதமர் திரு. பிரேமதாஸா ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து சுமத்திவருகிருர். அண்டை நாட்டின் அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்த நாம் ஒருபோதும் விரும்பப் போவதில்லை. பயங்கரவாதத்தை நாம் எப்போதும் கண்டித்தே வந்திருக்கிறேம். எனவே, தமிழர் பிரச்னைக்குத் தீர்வுகாண எமது உதவியை நாடியதுபோல பயங்கரவாதிகள் பிரச்னைக்கும் இந்தியாவின் உதவியை இலங்கை அரசு நாடியிருக்கலாம். இதைவிடுத்து இஸ்ரேலின் 'மொஸாட்', பிரிட்டனின் கூலிப்படைகளின் உதவியை நாடியிருப்பது கவலைக்குரியது'' இவ்வாறு திருமதி இந்திரா காந்தி தனது உரையில் குறிப்பிட்டார்.


# பதவி வெற்றிடங்கள்

ஏற்றுமதி இறக்குமதி கைத்தொழில்களில் பிரபல்யமடைந்த நிறுவனமொன்றின் தமிழ்ப்பகுதிகளிலுள்ள கிளை நிறுவனங்களில் உள்ள வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பொதுமுகாமையாளர்: [General Manager]
வயது 35—55 வியாபாரத் தொழிலனுபவம், நிர்வாகத்திறன் உடையவர்கள் விண்ணப்பிக்கலாம், வாகனம் செலுத்தும் திறனுமிருத்தல்வேண்டும்.

2. உதவி முகாமையாளர்கள்: [Assistant Managers]
வயது 30 — 40. உயர் கல்வித் தகமை உடையவர்களும், ஓரளவு நிர்வாகத்திறமையும் உடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

3. காசாளர்கள்: [Cashiers]
வயது 25—35. நல்ல கையெழுத்து G. C. E. A/L சித்தியடைந்தவர்களும், பிணைப்பணம் செலுத்தும் தகமையுடையவர்களும் விண்ணப்பிக்கலாம்.

4. கணக்கு லிகிதர்கள்- [Accounts Clerks]
வயது 20 — 30. G. C. E. O/L, A/L சித்தியடைந்தவர்களும், ஆங்கிலம் தெரிந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். கணக்கியல் அல்லது முன் அனுபவம் பெற்றிருத்தல் விரும்பத்தக்கது.

5. விற்பனைப் பெண்கள்: [Sales Girls]
வயது 20 — 30. சரளமாக [illegible]தக்கக்கூடியவர்களும், குறைந்தது G. C. E. (O/L) சித்தியடைந்தவர்களும விண்ணப்பிக்கலாம் விற்பனை நிலையங்களிலும், வீடு வீடாகவும் விற்பனைசெய்யக்கூடியவர்களாய் இருத்தல் வேண்டும்.

6. விற்பனை பிரசாரகர்கள்/ஊக்குவிப்பாளர்கள் [Canvassors / Promoters]
வயது 25—40 நன்ருக ஆங்கிலம், தமிழ் பேசத் தெரிந்தவர்களாகவும் G. C. E. A/L சித்தியடைந்தவர்களாகவும், விற்பனையில் (Marketing) முன் அனுபவமுள்ளவர்களாகவும் இருத்தல்வேண்டும்.

7. களஞ்சியப் பொறுப்பாளர்: [Store Keeper]
வயது 30 — 45. G. C. E. A/L படித்தவரும், குறைந்தது 2/3 வருட அனுபவமுள்ளவரும், பிணைப்பணம் செலுத்தக்கூடியவரும், சொந்தமாக புத்தகம் எழுதக்கூடியவரும், ஓரளவிலாவது வாகனம் செலுத்தக்கூடியவரும் விண்ணப்பிக்கலாம்.

8. பாதுகாவலர்கள் / மேற்பார்வையாளர்கள் (Security Guards / Officers)
வயது 25—40. G. C. E. O/L சித்தி பெற்றவரும், நல்ல உடற்கட்டுள்ளவர்களும் சைக்கிள் / மோட்டார் சைக்கிள் செலுத்தக்கூடியவரும், முன் அனுபவமுள்ளவர்களும், சேவையிலிருந்து ஒய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

மேற்கண்ட தகுதியுடையோரும், விண்ணப்பிக்க விரும்புபவர்களும் உங்கள் பெயர், முழு விலாசம், வயது, கல்வித் தகைமை. தற்போதைய தொழில், முன் அனுபவம், விசேட தகமைகளை உள்ளடக்கிய சொந்தக் கையெழுத்தில் தெளிவாக எழுதி எமது அலுவலக விலாசத்திற்கு ஆகஸ்ட் 20ம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.

ஒவ்வொரு விண்ணப்பதாரியினதும் திறமை அடிப்படையில் வேதனங்கள் வழங்கப்படும். அத்துடன் தமிழ்ப் பகுதியில் எவ்விடத்திலும் வேலைசெய்வதற்கும் தயாராக இருக்கவேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டிய விலாசம்:-
PERSONAL MANAGER,
M. S. ORGANISATION,
KALADDY,
KARANAVAI SOUTH,
KARAVEDDY.
(1308)

### மணிவாக்கு

அரசாங்கம் என்பது மனித தேவைகளைப் பூர்த்தி செய்ய மனித விவேகத்தினுல் உண்டான அமைப்பு.

—எட்மண்ட் பேர்க்

## நமது நோக்கு

# தமிழ் மக்கட்கு இறை யார்?

அமெரிக்காவின் பிரபல உயர் நீதிமன்ற நீதியரசர் பிரன்டே 1928-ல் **ஆற்றிய அரிய உரை இன்று** இலங்கைத் தமிழ்மக்களுக்கு மிகப் பொருத்தமாயிருக்கிறது.

''எங்கள் அரசு எல்லாம் வல்ல, எங்கும்நிறைந்த ஓர் ஆசான். தனது முன்மாதிரியால் ஒருபெரும் தேசத்தை நல்வழியில்அல்லது தீய வழியில் இட்டுச்செல்லும் சக்தி வாய்ந்தது''.

இவ்வாறுகூறியநீதியரசர் பிரன்டே தொடர்ந்து விளக்கிய கருத்து; குற்றம் என்பது ஒரு தொடுநோய். அரசாங்கம் தானே இட்ட சட்டத்தை மீறமுடியுமானல், சட்டத்தின் மேன்மை எங்கே; அதற்கு மணம், குணம் ஏதுமுண்டா?

தானே சட்டத்தை அவமதித்தால் தன்னுடைய பிரஜைகள் சட்டத்துக்கு அடங்கி நடப்பதெங்ஙனம், ஒவ்வொருமனிதனும் தான் இட்டதுசட்டமென நினைக்க அரசே வழிவகுக்கின்றது''

அமெரிக்க நீதியரசர்பிரன்டேயின் இந்த வியாக்கியானம் இன்று எமது நாட்டில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நடைமுறையிலிருப்பது கண்கூடு.

தொடுநோய் ஆட்சியில் இருந்து பரவுவதானல் அதனை எவ்விதவாதமென்பது?

எத்தனை வருடங்களாக இப்பகுதியில் வாழும் தமிழ் மக்கள் அரசின் இராணுவத்தால், காவற்படையினரால் கொல்லப்பட்டு,காயப்பட்டு இம்சிக்கப்பட்டு வருகின்றனர்.

தங்கள்உரிமைக்கு- பிறப்புரிமைக்கு வாதாடும் தமிழ் மக்களில் ஒருபகுதியினர் - இளம் தமிழர்கள் சிலர் போரை விட வேறுவழி இல்லைஎன்ற கொள்கை உறுதியில் அவ்வழியில் இறங்கியிருப்பது இன்று உலகறிந்த விடயம்.

இதனுல் ஏற்பட்ட கிளர்ச்சியும் கலவரமும் அரசுக்கு சமாளிக்க முடியாத சவாலாக இருப்பதால் இதனைப் பயங்கரவாதமென்று பெயரிட்டு அதனை ஒழிக்க இராணுவத்தில் நம்பிக்கை கொண்டுள்ளது.

கடந்த ஐந்து வருடங்களாகநடைமுறையிலிருந்து வரும் இவ்வித நடவடிக்கை விளைவித்த அனர்த்தங்கள் தமிழ்மக்களின் உயிர், உடைமைக்கு உண்டான சேதத்தில் முடிவுகண்டன

கடந்த வருட ஆடிக் கலவரம் சமாதான உலகின் கவனத்தைப் பெருமளவிற்கு ஈர்த்துவிட்டது. நாகரிக உலகம் தன்னுலியன்ற அளவிற்குக் கண்டனக் குரல் எழுப்பியது.

எங்கள் அண்டைநாடு இனப் பிரச்னைக்கு - தமிழர் உரிமைகளுக்கு-நியாயம் காண இலங்கை அரசின் அழைப்பை ஏற்று அரும்பாடுபட்டு, ஒரு நிதானமான முடிவிற்கு வழிகாட்டியது.

இன்று அந்த அரிய முயற்சிகளெல்லாம் மேடேறிவிட்டன.

இன்று இலங்கை அரசு தமிழர் பிரச்னை அல்ல தமிழர் பயங்கரவாத ஒழிப்பே தனது முதன்மையான கருமமென்று கடும் பிடியில் செயற்படுகின்றது.

இந்த நாடு எந்த நெருக்கடியில் சிக்குண்டிருக்கும் போதும் இந்தியா உதவி அளிக்கத் தயாராகவிருக்கின்றது. இதனை இந்தியப் பிரதமர் அடிக்கடி நினைவூட்டுகிருர். எங்கள் 'அரசு' இஸ்ரேலின் 'மொஸாட்' படையினையும், பிரிட்டனின் 'கூலிப்படையையும்' நம்பி பயங்கரவாதத்தை அடக்கி ஒடுக்கும் பணியில் தொடர்கிறது.

இதன் விளைவே இன்று யாழ்ப்பானத்தில் பெருகிவரும் பேரழிவும், பேரச்சமும்.

இந்த நிலைமையை உள்நாட்டு விடயமென்று இன்றும் பேசிக் கொள்வதானுல் இப் பகுதி மக்களுக்கு இலங்கையரசே இறை எனக் கொள்ளப்படும்.

மக்கள் வீட்டுக்குள் சிறைப்பட்டும் வெளியில் நடமாடினுல் ராணுவத்தினுல் கொல்லப்பட்டும், அன்ருட வாழ்க்கையில் அச்சமில்லாது கடமை புரியும் உரிமையற்றும் வாழும் போது இதற்கு யார் பொறுப்பு?

நாட்டினைக்காப்பதுஅரசு: அந்த அரசினைக் காப்பது நீதி. இதுவே தமிழ் மக்களின் பாரம்பரியக்கொள்கை

''முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப் படும்'' என்கிருர் தமிழ் முனிவர்.

இதுஎல்லாம்பொய்யாய்க் கனவாய் பழங்கதையாய்ப் போய்விட்டதா?

நாம்ஒருஇனம்மட்டுமல்ல பழம் பெருமைவாய்ந்த உலகளாவிய மதிப்புப் பெற்று வாழும் ஒருசமூகம். சட்டத்தின் கட்டுப்பாட்டுக் கமைந்துவாழும் பரம்பரை. நீதியுணர்வுக்கு உதாரணமான மனுநீதி கண்ட சோழனின் வாரிசுகள்.

இன்று யாழ்ப்பாணத்தில் தொடரும் அட்டூழியங்களுக்கு ஒரே குரல் கலையும் கண்டனமும் தெரிவித்திருக்கின்றது இந்தியப் பாராளுமன்றம்.

பாரதப் பண்பாட்டுக்குரித்தான முறையில்நடந்த செயல் இது. இப்பண்பாட்டில் உரிமை கொண்ட இலங்கைத் தமிழ் மக்களின் துயரைத் துடைக்க இலங்கையை நிர்ப்பந்திக்க வேண்டும்.

### சிற்றூழியர்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

காலை 7-30 மணியளவில் சிற்றூழியர்கள் சகலரும் வெளிநடப்பு செய்தனர்.

ஊழியர்கள் கடமைக்கு வந்து போகும் போது பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று அவர்கள் கோரினுர்கள்.

அரசாங்க அதிபர் திரு எம் பஞ்சலிங்கம் ஆஸ்பத்திரிக்கு வந்து உறுதியளித்ததைத் தொடர்ந்து ஊழியர்கள்காலை மீண்டும் கடமைக்குச் சென்ருகள். [க]

### இப்படிச்செய்தால்

# வடபகுதியில் வானெலியை தெளிவாகக்கேட்க யோசனே

(மானிப்பாய் நிருபர் க. கணேசலிங்கம்)

வடபகுதியில் எவ். எம். பண்பலைவரிசையைக்கொண்ட வானெலிப் பெட்டிகளை வைத்திருப்போர், ஒரு எம். எம். அன்ரனுவைச் சுமார் 40 அடி உயரத்தில் பொருத்தித் தமிழ் நிகழ்ச்சிகளைப் பகலிலும், இரவிலும் தெளிவாகக் கேட்க முடியும். சேவை ஒன்றின் நிகழ்ச்சிகளைப் பண்பலை (F.M) 87.2 மெகா ஹேட்ஸிலும், சேவை இரண்டு 89.7 மெகா ஹேட்ஸிலும் ஒலிபரப்பாகின்றன. சென்னை தொலைகாட்சியைப் பெறுவதற்கு உபயோகிக்கப்படும் அன்ரனுவையும் இதற்குப் பயன்படுத்தலாம்.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத் தாபனத்தின் மண்டைதீவு அஞ்சல் நிலையம் மூடப்பட்டபின்னர் யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் கொழும்பு ஒலிபரப்புகளைக் கேட்கமுடியாது கஷ்டப்படுகின்றனர். இதனுல் வானெலி நேயர் இந்த யோசனையைத் தெரிவித்திருக்கிருர் 'தமிழ் ஒலி' வானெலி நேயர் மன்றச் செயலாளர் திரு. எஸ். உமாகாந்தன்.

அத்தோடு,

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாண அஞ்சல் நிலையம் மூடப்பட்டதற்கு வருத்தம் தெரிவித்து 'தமிழ்ஒலி' வானெலி நேயர் மன்றத்தினர் ஒலிபரப்பு மாஅதிகாரிக்கு ஆட்சேபக் கடிதம்ஒன்றைஅனுப்பியுள்ளனர்.

இந்நிலையம் மூடப்பட்டதால் தமிழ்நிகழ்ச்சிகளை வடபகுதியில் தெளிவாகக் கேட்க முடிவதில்லையெனவும், மத்திய அலைவரிசையைமட்டும் கொண்ட வானெலிப் பெட்டிகளை வைத்திருக்கும் வசதி குறைந்த மக்கள் நிகழ்ச்சிகளை அறவே கேட்கமுடியாமலுள்ளனர் எனவும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடபகுதி மக்கள் நிகழ்ச்சிகளை மத்திய அலைவரிசையில் தெளிவாகக் கேட்கத்தக்கதாக விரைவில் வசதி செய்து கொடுக்கப்படவேண்டுமெனவும். இடைக்கால நடவடிக்கையாகப் பகல்வேளைகளில் புத்தளம் அஞ்சல் நிலையத்தினூடாக தமிழ் நிகழ்ச்சிகளை ஒலிபரப்புமாறும் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. புத்தளம் நிலையத்தின் மத்திய அலை ஒலிபரப்பை வடபகுதியில் தெளிவாகக் கேட்கக்கூடியதாக உள்ளது.

# சிமெந்து தொழிற்சாலையில்

## மற்றுமொரு சம்பவம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் அதிசக்தி வாய்ந்த தகர்க்கும் கருவி (எக்ஸ் புளோறர்) நேற்று முன்தினம் இனம்தெரியாத இளைஞர்களினுல் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலையின் கல்லுடைக்கும் பகுதியிலிருந்து இரண்டு ஜீப்பில் எடுத்துவரப்பட்டபோதே இளைஞர்களால் வழிமறிக்கப்பட்டு அந்தஜீப் ஒன்றிலேயே எடுத்துச்செல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

தொழிற்சாலையின் பாவனைக்கு இதுபோன்ற இரண்டு கருவிகளே இருந்தன. ஒன்று முன்னர் கொள்ளையடிக்கப்பட்டது. இப்போது மற்றையதும் கொள்ளையடிக்கப்பட்டு விட்டதாக கூட்டுத்தாபனம் வட்டாரங்கள் தெரிவித்தன.

# "திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தில் சேர முன்வரவேண்டும்!"

## மாணவர் மத்தியில் கல்விப்பணிப்பாளர்

(கிளிநொச்சி)

பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் எல்லோரும் பல்கலைக்கழகம் செல்ல முடிவதில்லை பல்கலைக்கழகம் செல்ல முடியாத மாணவர்கள் வாழ்க்கையில் சோர்வடையாமல் சுயமுயற்சி மூலம் முன்னேறி திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தில் சேர முன்வரவேண்டும். திறந்தவெளிப் பல்கலைக்கழகம் மாணவ சமுதாயத்துக்கோர் வரப்பிரசாதமாகும்.

இவ்வாறு முரசுமோட்டை முருகானந்த மகாவித்தியாலய உயர்தர மாணவர் ஒன்றியத்தின் மதியபோசன விருந்துபசாரவைபவத்தில் பிரதமவிருந்தினராக கலந்துகொண்டுசிறப்புச் சொற்பொழிவாற்றுகையில் கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஜனுப் எம். எம். மன்சூர் குறிப்பிட்டார்.

பிரஸ்தாப மாணவர் ஒன்றியத் தலைவர் பே. ஜெயத்திலகன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபத்தில் பரந்தன் வட்டாரக்கல்வி அதிகாரிநா. தணிகாசலம்பிள்ளை, கொத்தணி அதிபர் இரா. சின்னத்தம்பி கிளிநொச்சி இ. போ. ச அத்தியட்சகர் எ. கந்தையா, பரந்தன் மக்கள் வங்கி முகாமையாளர் எஸ். சண்முகநாதன் ஆகியோர் கலந்துசிறப்பித்தனர்.

அதிபர் சி. துரைராசா வரவேற்புரை நிகழ்தினுர். உப அதிபரும் மாணவர் ஒன்றிய போஷகருமான எம். பத்மநாதன் வித்தியாலய உயர்தர மாணவர் ஒன்றியப் பணிகள் பற்றி உரை நிகழ்த்தினுர். ரோட்டறிக் கழகத் தலைவர் ப. வை. ஜெயபாலன் பாடசாலை அபிவிருத்திச்சபை சேவைகளைப்பற்றிய உரையை ஆற்றினுர்.

கல்விப் பணிப்பாளர் ஜனுப் மன்சூர் பேசுகையில் இவ்வாருன நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம் மாணவர்களிடையே நற்பண்புகளை ஏற்படுத்த வாய்ப்பு ஏற்படுகிறது.

வாழ்க்கை என்பது பல இதழ்கள் சேர்ந்த மலராகும். கல்வி என்பது அவற்றுள் ஒரு இதழாகும். கல்விகற்றுவிட்டால்மட்டும் வாழ்க்கை பூரணமடையமாட்டாது. கற்ற கல்வியால் நாடும் வீடும் சிறக்க வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கல்விகற்று வெளியேறிய பழைய மாணவர்கள் இப்பகுதிகளின் கல்வி முன்னேற்றத்துக்கு அயராது பாடுபடுகின்றனர். இது இம்மாவட்டகல்வி வளர்ச்சி நல்லதோர் அறிகுறியாகும் என்ருர்.

### தெல்லிப்பழை ப. நோ. சங்கத்தில்

# கொள்ளை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் நேற்றுக்காலை கொள்ளை நடந்துள்ளது.

இரு சைக்கிள்களில் சென்ற நான்கு இளைஞர்கள் கொள்ளை அடித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் காரியாலயம் முன்னிலையில் இருகைக்குண்டுகள் வீசப்பட்டதாகவும், பின்னர் துப்பாக்கிமுனையில் அங்கிருந்த ஊழியர்களைப் பயமுறுத்திக் காசாளரிடமிருந்து பணம் கொள்ளை அடிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

லட்சக்கணக்கான பணம் கொள்ளையடித்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கொள்ளை அடித்த பண விபரம் தெரிவிக்கப்படவில்லை. (மா)

### மரண அறிவித்தல்

கணபதிப்பிள்ளை மகாதேவன் (சாஸ்திரியார்)

அராலிதெற்கு கணபதிப்பிள்ளை தம்பதிகளின் அருமை மகனும், தனலட்சுமி, மகேஸ்வரியம்மா, திலகவதியார் ஆகியோரின் சகோதரனும், மாரிமுத்து, சோமசுந்தரம், நடராசா ஆகியோரின்மருமகனும், பரமகுருநாதன், மகாலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னுரின் பூதவுடல் இன்று(10-8-84)வெள்ளிக்கிழமை பகல் 12 மணியளவில் அராலிதெற்கு பூணுவடை மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

திருமதி இ கணபதிப்பிள்ளை

(1310)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.